

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி 125 வது வட்ட சார்பில் டாக்டர் அம்பேத்கர் பகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு வட்ட கழக செயலாளர் அ.தவநேசன் தலைமையில் பகுதி கழக செயலாளர்கள் எஸ்.முரளி, நந்தனம் கி.மதி, மாமன்ற உறுப்பினர் அ ரேவதி, மாநில மீனவர் அணி துணை செயலாளர் மு.தம்பிதுரை, எ.குமாரி, சீமன், த.விக்னேஸ்வரன், சேகர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர் மயிலை.த.வேலு ஏழை எளிய மக்களுக்கு உணவு வழங்கினார். நிகழ்ச்சியில் மாவட்ட கழக பகுதி கழக வட்ட கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பாக பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாட்டுக்கு என்று தனித்துவமான கல்விக் கொள்கை!

# தமிழ்நாடு கல்விக் கொள்கைக்கு தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம் வரவேற்பும்- பாராட்டும்!

### தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவர் கு.தியாகராஜன் அறிக்கை!

சென்னை ஆக:9

தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாநில தலைவர் கு.தியாகராஜன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு;

தமிழக வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நாள் இன்று 8.08.2025 தமிழ்நாடு முதலமைச்சர் சமூக நீதிக் காவலர் அவர்களால் வெளியிடப்பட்ட தமிழ்நாடு கல்விக் கொள்கை மிகவும் பாராட்டப்பட வேண்டியது. ஏற்கனவே ஒன்றிய அரசினால் தேசிய கல்விக் கொள்கை 2020ல் வெளியிடப்பட்டது. அதிலே மும்மொழிக் கொள்கை, 3 ,5 , 8 வகுப்புகளுக்கு பொதுத் தேர்வு, மற்றும் குலக்கல்வி போன்ற ஏராளமான பிற்போக்கு சிந்தனை உள்ள திட்டங்கள் இடம் பெற்று இருந்தது.

இந்தியாவில் பெரும்பாலான மாநிலங்கள் தேசிய கல்விக் கொள்கை 2020 ஏற்றுக் கொண்ட நிலையில் தமிழ்நாடு சமூக நீதிக்கான மண் இங்கு பிற்போக்கு சிந்தனைகளுக்கு இடம் இல்லை என்பதை தெளிவாக எடுத்துக் கூறி ஒருபோதும் புதிய கல்விக் கொள்கை 2020 ஏற்க மாட்டோம் என்று திடமாக எடுத்துக் கூறி தமிழகத்திற்கு என்று புதிதாக தனியாக கல்விக் கொள்கை உருவாக்கப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார்ள்.



இவ்வாறு அறிவித்ததால் விரக்தி அடைந்த ஒன்றிய அரசு ஏழை எளிய மாணவர்களின் கல்வி நலன் என்று கூட பாராமல் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி இயக்கத்திற்கு வழங்க வேண்டிய சுமார் 2152 கோடியை இது வரை தராமல் வஞ்சித்து வருகிறது.

தேசிய கல்விக் கொள்கை 2020 ஏற்றுக் கொண்டால் உடனடியாக பல்லாயிரம் கோடி நிதி ஒதுக்கப்படும் என்று ஒன்றிய அரசு ஆசை வார்த்தைகளை அள்ளி வீசிய போதிலும் கூட எங்கள் தமிழ்நாடு என்பது பெரியார் வாழ்ந்த மண், பேரறிஞர் அண்ணா வாழ்ந்த மண், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் வாழ்ந்த மண், சமூகநீதி என்கின்ற ஒன்று இல்லாமல் ஒரு போதும் இங்கு தேசிய கல்விக் கொள்கையை ஏற்க மாட்டோம் அதாவது பத்தாயிரம் கோடி கொடுத்தாலும் தேசிய கல்விக் கொள்கையை நாங்கள் ஏற்க மாட்டோம் என்று கம்பீரத்தோடு முதல்வர் அறிவித்தார்கள்.

அதனை மெய்ப்பிக்கும் விதமாக இன்று இந்தியாவே வியந்து பார்க்கிற வகையில் தமிழ்நாட்டிற்கு என்று தனியாக தனித்துவமாக தமிழ்நாடு கல்விக் கொள்கையை கல்வியாளர்களை கொண்டு உருவாக்கி வெளியிட்டு இருக்கிறார்கள்.

அதில் தமிழ்நாடு எதிர்பார்த்த இரு மொழிக் கொள்கைதான் மொழிக் கொள்கையாக தொடர்ந்து கடைபிடிக்கப்படும் என்று கம்பீரமாக சொல்லப்பட்டு இருக்கிறது.

மேலும் 3, 5, 8 வகுப்புகளுக்கு பொதுத் தேர்வு முறை அமல்படுத்தப்படாது எனவும் ஏற்கனவே அமலில் உள்ள 11ஆம் வகுப்பு பொதுத் தேர்வும் இந்த கல்வியாண்டு முதலே இரத்து செய்யப்படும் என்றும் தெளிவாக அறிவிக்கப்பட்டுள்ளது. அனைத்து மாநிலங்களுக்கும் முன்னுதாரணமாக தங்களுக்கு என தனித்துவமான கல்விக் கொள்கையை உருவாக்கி வெளியிட்டு ஒட்டுமொத்த தமிழினத்திற்கு பெருமை சேர்த்திருக்கிற முதலமைச்சர் அவர்களுக்கும் துணை முதலமைச்சர் அவர்களுக்கும் சிறப்பாக இந்த கல்விக் கொள்கையை முன் நின்று உருவாக்கிய பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் சார்பாக வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஏற்கனவே உயர் கல்வியில் முதலிடத்தில் உள்ள தமிழ்நாடு புதிதாக கல்விக் கொள்கையை உருவாக்கிய தன் அடிப்படையில் 100 சதவீதம் உயர் கல்வி தேர்ச்சியை அடையும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. விரைவில் ஒட்டுமொத்த இந்திய ஒன்றியத்தில் உள்ள மாநிலங்களும் தங்களுக்கென தனித்தனியாக தங்களுடைய மரபுக்கேற்றவாறு தங்களுடைய பண்பாட்டுக்கு ஏற்றவாறு அவர்களுக்கு கல்வி கொள்கையை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை. நன்றி.

இவ்வாறு கு.தியாகராஜன் தெரிவித்துள்ளார்.

# சைதை மேற்கு 139 அ வட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள்!

### வட்டச் செயலாளர் சை.மு.சேகர் தலைமையில் புகழஞ்சலி செலுத்தப்பட்டது!

சென்னை, ஆக. 9 -

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 7வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மருத்துவம் (ம) மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர். மா.சுப்பிரமணியன் அறிவுறுத்தலுக்கிணங்க பகுதி செயலாளர். எம். கிருஷ்ணமூர்த்தி வேண்டுகோளுக்கிணங்க. 07.08.2025 புதன்கிழமை காலை 10.30 மணியளவில் 139 அ வட்டக்கிளை அலுவலகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திரு உருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதில் வட்ட அவைத் தலைவர் இ.வரதன் தலைமையில் டி.என். சிவமணி, மா.ஏழுமலை, பி. எஸ்.பிரகாஷ், சுமதிதீனதயாளன், பதி.வெங்கடேசன், வெ.புருசோத்தமன், என்.தீனதயாளன் ஆகியோர் முன்னிலையில் வட்டச் செயலாளர் சை.முசேகர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திரு உருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து புகழ் வணக்கம் செலுத்தினார்.

நிகழ்ச்சியில் பெரியவர். என்.சண்முகம், கொடி. து.சுரேஷ்பாபு, டி. கோபாலகிருஷ்ணன், யமஹா.ராஜேஷ், சார்ப்.சரவணன், கே.விஜயகுமார்,என்.ரமேஷ், ஆர். தாமோதரன்நியுகாலனி சம்பத், த. சேகர்,எஸ். அருண்குமார், பா.மோ.கார்த்திக்,கா. மூர்த்தி, எஸ்.முருகன்,எஸ். பி.தினேஷ், ப.மோகன்,ஏ. எம்.சேகர் மற்றும் பலர் பங்கேற்றனர். மேலும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திரு உருவப் படத்திற்கு வட்டத்தில் பாகம் தோறும் மலர்தூவி மரியாதை செலுத்தியவர்கள்.

ராகவன் காலனியில் எம். எஸ்.ஹரிபாபு, எம்.எஸ். மணி, சாரதிநகர்.டி.என்.சிவமணி, பி.எஸ்.பிரகாஷ் யஹாமா.ராஜேஷ், காமராஜர் காலனி. என்.தீனதயாளன், பா.வெங்கட்ராமன், வெ.மதிப்பிரியன், வீதிமாரியம்மன்கோயில். ஜி.ஏழுமலை, துளசி சந்திரசேகர்,பா. மோ. கார்த்திக், பி.பாலு,கே.பி. சிவா, வ. உ. சி. பிளாக். என்.ரமேஷ், எம். சுந்தரேசன், புலி.மணிகண்டன், ஜெ.விஜயகுமார், கே.இளங்கோ, எம்.வேலு, ஜெனார்த்தனம் பாகம் 16. ஜெ.தமிழ்ச்செல்வன், ஜி. நாகதேவி மேற்கு ஜோன்ஸ் சாலை. கொடி.து.சுரேஷ் பாபு,மு.மூர்த்தி, மூ.கௌதம், கே.பாரி, தேவு தெரு. இ.வரதன்,இ.வ.ரகுபதி மற்றும் பலர் அஞ்சலி செலுத்தினர்.



சமூக நீதிக் காவலர், தமிழகத்தின் சிற்பி, தலைவர் கலைஞர் அவர்களின் 7வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் பெரியார் நகரில் திருவொற்றியூர் கிழக்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர்.எம்.மணிகண்டன் ஏற்பாட்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டு தலைமைப் பொதுக் குழு உறுப்பினர் இரா.முருகேசன் தலைமையில், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார், தலைமைக் கழகப் பேச்சாளர் எழும்பூர் கோபி ஆகியோர் முன்னிலையில் பொதுமக்கள் ஆயிரம் பேருக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. இதில் எச்.ஜெகன், ஏ.ஜி.தேவராஜ், என்.ரகு, ஆர்.சி.செந்தில்குமார், வெங்கட், மனோஜ் (ஏ)தமிழ்மாறன், டி.கே.சிவ.சூர்யா, சமத் பாஷா, எம்.சதீஸ், அப்துல், பாட்ஷா, மற்றும் கழக இளைஞரணித் தோழர்கள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 7வது நினைவு நாளையொட்டி சோழவரம் தெற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் எம்.ஜெகன் ஏற்பாட்டில் கலைஞர் திருவுருவ படத்திற்கு மலர் மாலை அணிவித்து ஏழை எளியவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. இதில் சோழவரம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் மீ.வே.கர்ணாகரன் தலைமையில் சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் முன்னிலையில் நடைபெற்றது. இதில் ஒன்றிய ரெட்ஹில்ஸ், எம்.எஸ்.மணிகண்டன் சுகவேணி, முருகன், எஸ்.பி.குமார், கே.ஜாகிர் உசேன், ஜி.நசீர்பாஷா, பி.வி.எத்திராஜ், கே.வி.தியாகராஜன், எஸ்.வி.என்.ஜே.காட்சன், கே.சுதாகர், எம்.விமல், எஸ்.ராஜன், எஸ்.மணிகண்டன், எச்.பிரசாந்த், எம்.ராகுல், ஜே.பவானி, எம்.வினோத், என்.நவீன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# நூற்றாண்டு நூலகம் கலைஞர்!



தமிழ் போற்றும் கலைஞர், சமூகம் போற்றும் கலைஞர், அரசியல் போற்றும் கலைஞர், உலகம் உள்ளவரை வான் உயர்ந்த வள்ளுவனைப் போல் வாழ்ந்து கொண்டே இருப்பார், நூற்றாண்டு நூலகமாய் திகழ்வார் தலைவர் கலைஞர்.

உலக தமிழர் போற்றும் தலைவர்,ஐந்தாம் வகுப்பு மாணவனாக பள்ளியில் தொடங்கிய போராட்டம், தனது இறுதி வாழ்விலும் சேப்பாக்கத்தில் போராட்டம், நீதிமன்றம் வெற்றியை பரிசாக தந்தது, பகுத்தறிவு பள்ளி கடற்கரையில் பேனாவுடன் எழுந்து நின்றது,

மாணவப் பருவத்திலே கல்வி மற்றும் சுயமரியாதைப் போராட்டம், ஐந்தாம் வகுப்பு மாணவனாக கல்விக்கு போராட்டம், வித்வான்களானாலும், திறமைசாலிகளானாலும் கிராமத்தில் உள்ள ஆதிக்க சக்திகளுக்கு தலைவணங்க வேண்டிய நிலை இருந்ததைக் கண்ட கலைஞருக்கு தீக்கனல் மூண்டது, சுயமரியாதைப் போராட்டம் பிறந்தது,

13 முறை தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினர், 13 முறை தேர்தலில் போட்டியிட்டு 13 முறையும் வென்ற சட்டமன்ற உறுப்பினர், இந்திய வரலாற்றின் சாதனைத் தலைவர் கலைஞர்,

தமிழ் மொழியிலும் பகுத்தறிவு புகுத்தியவர் கலைஞர், கலைஞர் மக்களிடத்திலும்,தமிழ் மொழியிலும் பகுத்தறிவை புகுத்தினார்,ஆம்,

உடல் ஊனமுற்றோர் - மாற்றுத்திறனாளி, அரவாணி - திருநங்கை, விதவை - கைம்பெண், பிச்சைக்காரார் - இரவலர் என் இன்னும் பலவாறு,

இந்தியாவிலே தமிழ்நாட்டில் தான் கிராமங்களில் முதன்முதலாக மின் இணைப்பு கலைஞர்,

கிராமங்களின் வளர்ச்சியில் கலைஞர், நகர்ப்புறங்களின் கல்வி வளர்ச்சி மட்டும் போதாது என்று, கிராமங்களின் அடிப்படைகல்வி பெரும் வசதி, உயர்கல்வி வசதிகள், முதல் தலைமுறை கல்வி, மருத்துவம், பொறியியல்,அறிவியல் மற்றும் கலை கல்லூரிகளில் இட ஒதுக்கீடு என கிராமங்களை கல்வி வளர்ச்சி பாதைக்கு அழைத்துச் சென்றவர் கலைஞர், அதே போல ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல் மருத்துவம்,

குறளோவியம் தீட்டிய அய்யன் திருவள்ளுவனுக்கு கோட்டம், குமரி முனையில் வான்தொடும் சிலை,

கலைஞர் ஓர் அற்புத கவிதை,தானே எழுத்தாகி,சொல்லாகி, பொருளாகி,யாப்புமாகி, அணியுமாகி, மொழியாய், மொழியின் வளமாய், கவிதையாய், தன்னைத் தானே எழுதிக் கொண்ட அழகான அற்புத கவிதை கலைஞர், பெரியாரும், அண்ணாவும் வியந்த கலைஞர்,



**த. சௌந்தரராஜன்,**
முன்னாள் இணை இயக்குனர்/ துணை ஆணையர், வேலூர் மாநகராட்சி.

பள்ளிப் படிப்புக்காக போராடியவர், சுயமரியாதைக்காக போராடியவர், இந்தி எதிர்ப்பு, தமிழ் வாழ்க, முதல் கையெழுத்து பிரதிநிதி மாணவர் முரசு,முதல் விவாதம் ஆத்திகம், நாத்திகம், எத்தனை அறிவார்ந்தவர் கலைஞர் என வாழ்த்தினர்.

ஏழைகளின் சிந்தனையாளர் கலைஞர், மக்கள்படும் துன்பங்களைச் சுற்றியே இருந்தது,தனது 48வது பிறந்தநாளில் பிச்சைக்காரர் மறுவாழ்வு திட்டம்,

கை ரிக்சா ஒழித்து சைக்கிள் ரிக்சா தந்தார்; கண்ணொளி தந்தார்!

ஜனகனமன எனத் தொடங்கும் வங்கமொழியின் தேசிய கீதத்திற்கு இணையான மரியாதை தமிழ் மொழியில் கிடைக்க 1969இல் மனோன்மணியம் சுந்தரனார் எழுதிய தமிழ்த்தாய் வாழ்த்தில் திருத்தம் செய்து 1970 முதல் இன்றுவரை அரசு நிகழ்ச்சிகளில் தமிழ்த்தாய் வாழ்த்து இசைக்க செய்தவர் கலைஞர். பொதுமக்கள் நேரடியாக மாவட்ட ஆட்சியரிடம் மனுக்கள் கொடுக்கும் முறையை கொண்டு வந்தவரும் கலைஞர்.

தேசிய ஒருமைப்பாட்டிற்கும், அந்நிய நாட்டின் அத்துமீறலுக்கு எதிரான முதல் குரலாக கலைஞரின் குரலாகத்தான் இருக்க முடியும், அவசர காலகட்டத்தில் மத்திய அரசுக்கு நிதிவசூல் கொடுப்பதிலும் முன்னோடியாக, முதல் ஆளாக திகழ்ந்தவர் கலைஞர்.

பிறவிலேயே பேசவோ கேட்கவோ இயலாத குழந்தைகள், கலைஞர் காப்பீட்டு திட்டத்தில் மேல் சிகிச்சை பெற்று (COCHLEAR IMPLANT) புது வாழ்வு பெற்றனர், ஜெனிவா ஐநா பொது மன்றம் இதனை கண்டு வியந்து ஆய்வு மேற்கொண்டது, ஆய்வில் மருத்துவம் படிக்காத கலைஞர் திட்டமே என அறிந்து ஐநா சபையில் கரவொலி எழுப்பி வாழ்த்து தெரிவிக்கப்பட்டது,

கலைஞர் பல பிரதமர்கள் மட்டுமின்றி குடியரசுத் தலைவரை உருவாக்கும் ஆற்றலையும் பெற்று இருந்தார்,இந்திய அரசியல் வரலாற்றில் கலைஞருக்கு தனி இடம் உண்டு அத்தகைய சாணக்கிய திறமை மிக்க கலைஞரை காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையில் போற்றி புகழாத அரசியல் தலைவர்கள் இல்லை என்றே கூறலாம்.

பெண்களுக்கு சொத்தில் சமஉரிமை என இந்திய துணை கண்டத்தில் முதல்முறையாக அமல்படுத்திய ஒரே தலைவர் கலைஞர்,

இந்தியாவில் தமிழ்நாட்டை தொழிற்சாலை நிறைந்த முன்னோடி மாநிலமாக ஆக்கியவர் கலைஞர், டைட்டல்பார்க், கார் தொழிற்சாலைகள், கண்ணாடி தொழிற்சாலைகள், எலக்ட்ரானிக் தொழிற்சாலைகள் என தொழிற்சாலைகள் நிறைந்த மாநிலமானது,

கலைஞர் பேச்சில் சரணாகதி அடைந்து விடுவார்கள், கலைஞர் பேசுகின்ற பொதுக்கூட்டம் என்றால் மாற்றாரும் மறைந்து நின்று கேட்பார், அனல்பறக்கும் பேச்சால், கடுங்குளிரும் காணாமல் போகும், கட்டுக்கோப்பாய், ராணுவ வீரர்கள் போல் தலைவர்கள், தொண்டர்கள், இளைஞர்கள், இலக்கியவாதிகள், தமிழறிஞர்கள், படைப்பாளிகள்,பொதுமக்கள்,நடுநிலையாளர்கள் என அனைவரையும் மெய்சிலிர்க்க வைக்கும் கலைஞரின் பேச்சு, கலைஞரை எதிர்க்க நினைத்தவர்களும் கலைஞரின் பேச்சைக் கேட்டு சரணாகதி அடைந்து விடுவார்கள், அல்லது புஸ்வானம் ஆகிவிடுவார்கள்,

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம், கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,

சட்ட பல்கலைக்கழகம், பெரியார் பல்கலைக்கழகம், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியல் பல்கலைக்கழகம்,

இந்திய கடல்சார் பல்கலைக்கழகம், திருவாரூர் மத்திய பல்கலைக்கழகம், தமிழ்நாடு தோட்டக்கலை பல்கலைக்கழகங்கள் என உருவானது,

குடிசைவாசிகளை மாடி வீட்டுக்காரர்களாக மாற்றிய கலைஞரின் திட்டத்தை ஜெயபிரகாஷ் நாராயணன் மற்றும் வி.வி. கிரி ஆகியோர் வெகுவாக பாராட்டினார்கள்.

பெரியார் அவர்கள் தன்னைவிட 45 வயது குறைந்தவரை கலைஞர் என்று மரியாதையுடன் அழைத்தது அனைவருக்கும் ஆச்சரியம் தந்தது,

சாதி சமயம் மறந்து ஒற்றுமையாய் வாழ்ந்திட பெரியார் நினைவு சமத்துவபுரம் அமைத்து, சமூக சீர்திருத்தத்துக்காக தனித்துறையை உருவாக்கியவர் கலைஞர்,

அனைத்து துறைகளிலும் உச்சம் தொட்டவர் கலைஞர்,

பத்திரிக்கையாளராக, திரைக்கதையாளராக, வசன கர்த்தாவாக,

பாடல் ஆசிரியராக,

எழுத்தாளராக, கவிஞராக,

நாவல்,நாடக ஆசிரியராக, கட்டுரையாசிரியராக, உரைநடை,

சிறுகதை,திறனாய்வாளர்,ஆராய்ச்சியாளர், சிற்றிலக்கியவாதி, இலக்கியப் புலவர், தொண்டனாக, பேச்சாளராக, அரசியல்வாதியாக, சட்டமன்ற உறுப்பினராக, கட்சித் தலைவராக, எதிர்க்கட்சித் தலைவராக, மாண்புமிகு அமைச்சராக, முதலமைச்சராக,

இப்படி தான் தொட்ட துறைகளில் யாரும் தொட முடியாத சிகரம் தொட்டு, விஞ்சமுடியாத வரலாற்றுப் புகழைப் பெற்றவர் கலைஞர்,

சமூக அக்கறையின்பால் கொண்ட பற்றால், உலகத் தமிழர்களும் தலை நிமிர்ந்து நிற்கும் வகையில் தொண்டாற்றிய கலைஞர் உலகம் உள்ளவரை வள்ளுவரை போல் வாழ்ந்து கொண்டே இருப்பார், நூற்றாண்டு நூலகமாய் திகழ்வார் தலைவர் கலைஞர். ●



தமிழ்நாட்டின் நவீன சிற்பி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, அவரது திருவுருவப் படத்திற்கு திரு.வி.க நகர் வடக்குப் பகுதி, 71 வது வட்டத்தில் வி.ஜெகன், முகமது ரஃபி தலைமையில் பகுதிக் கழகச் செயலாளர் செ.தமிழ்வேந்தன் மலரஞ்சலி செலுத்தி உணவு வழங்கினார். நிகழ்வில் தில்லை கதிரவன், புல்லட் ரமேஷ், புனிதவதி எத்திராசன், சுவிட் பாபு, ஜெ. மணிகண்டன், ந.வேலு நாராயணன், ஜமுனா, பாலாஜி, குமார், உஷா, வினோத் மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.